# ALL UNIONS AND ASSOCIATIONS OF BSNL
# NAGERCOIL

தோழர்களுக்குவணக்கம்.

நாகர்கோவில் AUABசார்பாக இணைந்தமாவட்டசெயற்குழு கூட்டம் 07-02-2019 அன்றுSNEA மாவட்டதுணைச்செயலாளர் தோழர் D.மைக்கேல் ராஜ் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. 40 தோழர்கள் கலந்து கொண்டார்கள். அனைவரையும் NFTE மாவட்டத்தலைவர் தோழர் C.ராஜேந்திரன் வரவேற்றார். BSNLEU மாநில உதவிச்செயலாளர் தோழர் பி.இந்திரா துவக்கி வைத்து உரையாற்றினார். மாவட்டச்செயலாளர்கள் தோழர்கள் S.லெட்சுமணபெருமாள், S.செல்வராஜன், P.ராஜு கோரிக்கையை விளக்கி பேசினார்கள். தோழர்களின் விவாதத்திற்குபிறகு நிறைவுரையாக SNEA அகில இந்திய பொருளாளர் தோழர் R.ராஜன் உரையாற்றினார். கலந்து கொண்ட அனைவருக்கும் SNEA மாவட்டத்தலைவர் தோழர் M.ரோஸ்சிறில்சேவியர் நன்றி கூறினார்.

கீழ்கண்ட முடிவுகள் எடுக்கப்பட்டது.

- அகில இந்திய கூட்டமைப்பின் அறைகூவலின படி 2019- Feb -18,19,20 தொடர் வேலைநிறுத்த போராட்டத்திற்கு ஆதரவு திரட்ட, வரும் 11-2-2019 முதல் 15-02-2019 வரை நடைபெற உள்ள தெருமுனைக் கூட்டங்களை மிகசிறப்பாக நடத்த வேண்டும்.
- மக்கள் ஆதரவை கேட்டு 1000 போஸ்டர், 2000 நோட்டீஸ் அச்சிட்டு வினியோகிப்பது என்று முடிவு செய்யப்பட்டது
- 13-02-2019 பத்திரிகையாளர் சந்திப்பு நடத்துவது என்று முடிவு செய்யப்பட்டது
- 15-02-2019 அன்று சிறப்புக் கூட்டத்தில் அதிக ஊழியர்களை பங்கேற்க செய்ய வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது.
- அனைத்து ஊழியர்களையும் போராட்டத்தில் கலந்துகொள்ள செய்ய அனைத்து விதமான அனுகுமுறைகளையும் செய்யவேண்டும்.
- போராட்டத்தில் கலந்து கொள்ளாத சங்கங்களை அனுகிஆதரவு கேட்பது என்று முடிவு செய்யப்பட்டது.

அனைத்துசங்க கூட்டமைப்பு முடிவுகளை ஏற்றுக்கொண்டு அனைத்து இயக்கத்திலும் கலந்து கொண்டு போராட்டத்தை வெற்றியடைய செய்வீர். ஒன்றுபட்டப் போராட்டம் வென்றுகாட்டும் நிச்சயம்.

தோழமையுடன்

S.லெட்சுமணபெருமாள் — பா.ராஜு
தலைவர் — அமைப்பாளர்